Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
COURT, ANNUR
Case No.C.C.No. 101 /2024

Deposition of witness for Prosecution P.W.1 Date : 27.06.2025

| | | | |
|---|---|---|---|
| Name : | சுந்தரசாமி | Village : | கோட்டைபாளையம் |
| Father's Name : | சோமசுந்தரம் | Taluk : | அன்னூர் |
| Age : | 55 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of June 2025 **(Accused Present)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை.**

நான் தற்போது கோட்டைபாளையத்தில் குடியிருந்து வயதானதால் வேலைக்கு எதுவும் செல்வதில்லை. இந்த வழக்கு விபத்து சம்பவத்தினை நான் நேரில் பார்த்தேன். இந்த விபத்து சம்பவத்தில் அடிப்பட்டு இறந்து போன நபர் என் அம்மா. 05.04.2024 ம் தேதி கோட்டைபாளையத்தில் இருக்கும் எங்கள் காட்டில் இருந்து வீட்டிற்கு வரும் போது ரோட்டில் இருந்து வீட்டிற்கு வடபுறமாக நடந்து வந்து கொண்டிருந்து போது அவருக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனத்தினை ஓட்டி வந்த நபர் என் அம்மாவின் பின்புறமாக வந்து மோதிவிட்டார். அந்த இருசக்கர வாகனத்தினை ஓட்டி வந்த நபர் சுந்ததராஜ் தான். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளவர் தான். (சாட்சி ஆஜர் எதிரியை சுட்டிக்காட்டி அடையாளம் காட்டுகிறார்) இந்த வழக்கு தொடர்பாக நான் புகார் கொடுத்துள்ளேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் நான் கொடுத்த புகார் தான். (**அந்த புகார் அ.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) இந்த வழக்கு விபத்து தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள். விபத்து நடந்த அன்றிரவே என் தாயார் இறந்துவிட்டார்கள். இந்த வழக்கு விபத்திற்கு இருசக்கர வாகனத்தினை ஓட்டி வந்த சுந்தரராஜ் வாகனத்தினை வேகமாக ஓட்டி வந்தது தான் காரணம்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு எழுத படிக்கத் தெரியாது. அ.சா.ஆ.1 புகாரை காவல் நிலையத்தில் வைத்து போலீசார் தான் எழுதினார்கள் என்றால் சரிதான். அந்த புகாரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல்நிலையத்திற்கு எப்போது சென்றேன் என்றால் வெள்ளிக்கிழமை நைட் சென்றேன். 5ம் தேதி காலையில் நான் புகார் கொடுத்தேன். அப்போது தான் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். அன்றைய தினமே போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அதற்கு பின்னிட்டு நான் காவல்நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான். என்னை விசாரித்த காவலர் யார் என்று தெரியாது. நான் காவல்நிலையம் சென்ற போது என்னுடன் கிட்டுச்சாமி, ராமசந்திரன், பழனிச்சாமி, முருகேசன், செந்தில் குமார் ஆகியோர் வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் அனைவரும் எனக்கு உறவினர்கள்

என்றால் சரிதான். அவர்கள் என் சித்தப்பா மற்றும் பெரியப்பா மகன்கள். இந்த விபத்து நடந்த போது புகார் கொடுத்த போது நைட் போலீசார் யாரும் வரவில்லை. அடிப்பட்டது இரவு நேரம். மறுநாள் தான் வந்தார்கள். விபத்து நடந்த பகுதியில் பொது மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதி என்றும் அங்கு நிறைய வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அங்கு அருகே குடியிருப்பவர்களை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள். கிட்டுச்சாமி, ராமச்சந்திரன், பழனிச்சாமி ஆகியோர் நான் தகவல் கொடுத்து தான் வந்தார்கள் என்றால் கூலி வேலைக்கு சென்றுவிட்டு திரும்ப அவர்கள் வந்து கொண்டிருந்த போது தான் விபத்து நடைபெற்றது. என் தாயாருக்கு வயது அப்போது 85. இந்த வழக்கு விபத்திற்கு முன்னரே என் தாயாருக்கு விபத்து ஏற்பட்டிருந்ததா என்றால் அவர் கீழே விழுந்து காலில் அடிப்பட்டிருந்தது. ஆனால் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் தவறு. அவருக்கு நல்ல கண் பார்வை இருந்தது. விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலையில் தெரு விளக்கு இல்லை என்று சொன்னால் தவறு, தெரு விளக்கு உள்ளது, விபத்து நடைபெற்ற சமயம் விளக்கு எரிந்தது. விபத்தினை நான் நேரில் பார்த்தேன் என்றும் சுந்தராஜ் தான் அந்த விபத்தினை ஏற்படுத்தினார் என்று போலீசார் விசாரித்த போதும் புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் இந்த விவரங்களை சொல்லவில்லை என்றும் நீதிமன்றத்தில் தான் இதை பொருத்து முதன் முறையாக சாட்சியமளிக்கிறேன் என்றால் தவறு. என் அம்மாவை தனியார் ஆம்புலன்சில் அழைத்து சென்றதாக சொல்லியுள்ள போது எந்த ஆம்புலன்ஸ் என்று இருட்டில் தெரியவில்லை. அதனால் ஆம்புலன்ஸ் வாகனத்தின் பெயர், அதன் ஓட்டுநர் மற்றும் பதிவு எண் ஆகியவற்றினை இருட்டாக இருந்ததால் எனக்கு தெரியாது என்று சொன்னால் தவறு. என் தாயார் காட்டில் இருந்து வீட்டிற்கு வந்த போது விபத்து ஏற்பட்டதாக போலீசார் விசாரித்த போது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இவ்வழக்கு விபத்து தொடர்பாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றும் நான் இன்று தான் வழக்கின் எதிரியை முதல் முறையாக பார்க்கிறேன் என்று சொன்னால் தவறு. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன வகையில் எந்த விபத்தும் ஏற்படவில்லை என்றும், இறந்து போன நபர் என் தாயார் என்பதால் அவருக்கு இழப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக இவ்வாறு சாட்சியமளித்துள்ளேன் என்றும், எதிரியின் வாகனம் என் தாயார் மீது மோதவில்லை என்று சொன்னால் தவறு. எதிரி எங்கள் பகுதிக்கு அருகே தான் குடியிருக்கிறாரா என்றால் அந்த ரோட்டில் சென்று வருவதை பார்த்துள்ளேன். அவருக்கு அருகே பூமி உள்ளது.

Sd/-V.Monika
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.